இறைவனின் திருப்பெயரால்...

# இஸ்லாம் என்றால் என்ன ?

நாம் வணங்குவதற்கு தகுதியானவன் யார் என்றால் நம்மை படைத்து பரிபாலிக்கும் அந்த ஒரே இறைவன் தான். அவனைத்தவிர வேறு கடவுள் இல்லை. அவன் மனிதனிடத்தில் எந்த தேவையும் அற்றவன், அவன் யாரையும் பெறவுமில்லை, பெறப்படவுமில்லை,அவனுக்கு நிகராக எவருமில்லை.மேலும் மனைவி,மக்கள்,பசி,தூக்கம் போன்ற தேவைகளுக்கு அப்பாற்பட்டவன் தான் இறைவனாக இருக்க முடியும் என்ற உறுதியான நம்பிக்கையே இஸ்லாத்தின் அடிப்படை கொள்கையாகும்.

## <u>படைப்பு</u>

இறைவன் மனித குலத்தை ஆதம் என்ற மனிதரை மண்ணிலிருந்தும், அவருக்கு துணையாக ஹவ்வாவை அவரது விலா எலும்பிலிருந்தும் படைத்தான்.இந்த ஆதம் எனப்படும் முதல் மனிதரே முதல் தூதரும் ஆவார்.இவர்களிலிருந்தே இஸ்லாம் தொடங்குகுகிறது அதன் பிறகு மனிதகுலம் பல்கிப்பெருகி பல சமுதாயமாகவும் இனங்களாகவும் அந்தந்த இடத்தின் தட்பவெட்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப இனம் ,மொழி ,நிறம் மொழி என்று வேறுபடுகின்றனர்.நாம் அனைவரும் ஒரே தாய் தந்தையிலிருந்து வந்தவர்கள் என்ற உண்மையை உணர்ந்தாலே உலகில் சமத்துவம் வந்துவிடும்.முதல் மனிதரான ஆதமை படைத்து அனுப்பியபோதே அவரை மனிதர்களுக்கு முன்மாதிரியாகவும்,இறைவனிடமிருந்து வரும் செய்தியை பெற்று விளக்கி கூறக்கூடிய பொறுப்பையும் கொடுத்தே இறைவன் ஆதமை தூதராக அனுப்பியுள்ளான்.

## <u>வேதங்கள்</u>

ஒவ்வொரு சமுதாயத்தினருக்கும் தூதர்களை தேர்ந்தெடுத்து அந்தந்த காலகட்டத்திற்கேற்ப சட்டங்களை கொண்ட வேதங்களை இறைவன் அருளியிருக்கிறான்.குர்ஆனில் குறிப்பிட்டுள்ள சில வேதங்கள்:தௌராத் (யூதர்கள் தோரா என்றழைப்பார்கள்) மூஸா என்ற தூதருக்கும்,சபூர்(கிருஸ்தவர்கள் தாவீதின் சங்கீதம் என்றழைப்பார்கள்) தாவூத் என்ற தூதருக்கும்,இன்ஜில் ஈசா என்ற தூதருக்கும், குர்ஆன் முஹம்மது என்ற இறுதி தூதருக்கும் அருளப்பட்டது.வேதங்களை நம்புவது இறை நம்பிக்கையின் ஒரு முக்கிய அம்சமாகும்.முந்தைய வேதங்கள் மனிதர்களால் வசதிக்கேற்றவாறு மாற்றப்பட்டதால் இறைவன் "நாமே இந்த வேதத்தை(திருக்குர்ஆனை) பாதுகாப்போம்" என்று கூறுகிறான்.

இறை தூதர்கள் (நபிமார்கள்)ஒரு சமுதாயம் தீவிர வழிகேட்டில் இருந்து அத்தகைய வழிகேட்டால் மற்ற சமுதாயத்தையும் அது "ஒரு பெரிய கப்பலில் விழுந்த சிறு துளையால் கப்பலில் உள்ள அனைவருக்கும் ஆபத்து வரும் என்பதுபோல அது பாதித்து பரவ தொடங்கும்போதெல்லாம் இறைவன் அந்த பழுதை நீக்கும் முகமாக 'ஒரு மருத்துவரை போல தூதரையும் செயல்விளக்க புத்தகமான வேதத்தையும்(guide) கொடுத்து அனுப்புகிறான்.அந்த தூதர்கள் வேதத்தின் துணையோடு மக்களுக்கு சத்தியத்தையும் வெற்றி பெறும் வழிமுறைகளையும் எடுத்துகூறி அதேபோல் வாழ்ந்தும் காட்டி இருக்கிறார்கள்.

## <u>இப்ராஹீம் நபி</u>

இறைதூதர் இப்ராஹீம் (பைபிளில் ஆப்ரஹாம்) இறைதூதர்களில் ஒருவரான இப்ராஹீம் அவர்கள் தனி ஆளாக அந்நாட்டின் கடவுளாக வணங்கப்பட்ட அரசனையும் சிலை வணங்குவோரான அந்த சமுதாயத்து மக்களை எதிர்த்து பிரச்சாரம் செய்தார். அவரின் தந்தை, அந்த மக்கள் வணங்கி வந்த சிலைகளை செதுக்கும் சிற்பியாகவும் பூசாரியாகவும் இருந்தார்.அவரிடம் "உங்கள் கைகளால் செய்த சிலைகள் எவ்வாறு உங்களுக்கு நன்மையோ தீமையோ செய்ய இயலும்"என்று அறிவுப்பூர்வமாக கேள்வியை எழுப்பி அதற்க்கு தீர்வாக நம்மை படைத்தது பாதுகாக்கும் நிகரில்லா அந்த ஒரே இறைவனை வணங்குமாறு இப்ராஹீம் நபி உறுதியாக நின்றார்.எவ்வளோவோ கூறியும் கேட்காத அந்த மக்களை திருத்தும் நோக்கில் சமயம் பார்த்து ஆலயத்தில் அந்த மக்கள் வணங்கி வந்த சிலைகள் பெரிய சிலை தவிர்த்து மற்ற குட்டி சிலைகளை எல்லாம் உடைத்து விட்டார். பின்பு தங்கள் வணங்கிவந்த சிலைகளை உடைத்தது அவர்தான் என்றறிந்து அவரை பிடித்து கடும்கோபத்துடன் விசாரித்தபோது 'அதோ நிற்கிறதே அந்த பெரிய சிலைதான் இதை செய்திருக்கும்

வேண்டுமானால் அதையே கேட்டுபாருங்கள் என்று கூறிவிட்டார்.அந்த பதிலால் மக்கள் திகைத்து அடுத்த கணமே சிந்திக்க தொடங்கிவிட்டனர்.

குழந்தை பாக்கியம் இல்லாமல் இருந்த இப்ராஹீம் நபிக்கு தள்ளாத வயதில் இறைவன் ஒரு குழந்தையை கொடுக்கிறான்.அந்த இறைவனின் கட்டளைப்படி, கிடைத்த தனது குழந்தையை அறுத்து பலியிட முனைந்தார் ஆனால் பலியிடும் இறுதி நேரத்தில் அந்த குழந்தைக்கு பகரமாக ஒரு ஆட்டை பலியிடுமாறு கட்டளை வந்தது.கடவுள் ஏன் ஒரு மனிதனை பலியிடுமாறு கூற வேண்டும்? என்று உங்களுக்கு ஒரு சந்தேகம் எழலாம் .அப்போதைய மக்கள் கடவுளுக்காக குழந்தைகளை பலியிட்டு வந்தனர் அதை மாற்றவே இறைவன் இந்த சோதனையை இப்ராஹீமை கொண்டு செய்ய வைத்தான்.

இவ்வாறுதான் நரபலி ஒழிக்கப்பட்டது. இந்த சம்பவத்தை நினைவுகூரும் முகமாக முஸ்லிம்கள் இன்றும் ஆடு,மாடு போன்றவற்றை ஹஜ் பெருநாள்(பக்ரீத்) அன்று இறைவனின் கட்டளைப்படி (குர்பானி) பலிகொடுத்து வருகின்றனர்.இந்த நபி செய்த ஒவ்வொரு செயலும் இன்றுள்ள மக்களுக்கு ஒரு வழிமுறையாக ஆக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாகத்தான் இஸ்லாத்தின் முக்கிய கடமையான ஹஜ் என்ற புனித பயணத்தை முஸ்லிம்கள் நிறைவேற்றி வருகின்றனர்.

<u>மூஸா நபி</u>

அவருக்குப்பின் இறைத்தூதர் மூசா (பைபிளில் மோசே ) என்பவரும் ஓரிறைகொள்கைக்காக பெரிதும் பாடு பட்டார் இறுதியாக அந்நாட்டின் மன்னன் அவனது படைகளோடு கொள்வதற்காக துரத்திக்கொண்டு வரும் போது இறைவனின் கட்டளைப்படி கடல் பிளந்து அதனுள் அவரும் இறை நம்பிக்கையாளர்களும் தப்பினர்.ஆனால் அவரை துரத்தி வந்த ஃபிர்அவ்ன் என்ற மன்னன் மற்றும் அவனது படையினர் கடலில் மூழ்கடிக்கப்பட்டனர்.திருக்குர்ஆனில் கூறப்படும் எந்த அதிசயமாக இருந்தாலும் இறைவன் அதற்க்கு அத்தாட்சி வைக்காமல் இருப்பதில்லை.இன்றும் அந்த அரசனின் உடல் எகிப்தில் உள்ள அருங்காட்சியகத்தில் காணக் கிடைக்கிறது.

<u>ஈசா நபி</u>

பிறகு ஈசா நபி (பைபிளில் இயேசு)அவர்களை தூதராக இறைவன் தேர்ந்தெடுத்து அனுப்பினான். இவரும் மற்ற தூதர்களை போலவே அந்த ஒரே இறைவனை மட்டுமே வணங்க வேண்டும் என்ற சத்தியத்தை நோக்கி அழைத்தார். இதனால் எதிரிகளால் கடுமையாக துன்புறுத்தப் பட்டார். இவர் இறைவனின் கட்டளைப்படி தன்னை தூதர் என்று நிரூபிக்க பல அற்புதங்களை நிகழ்த்திக் காட்டினார்.கிருஸ்தவ சமுதாயம் இந்த சில அற்ப்புதங்களை நிகழ்த்திய காரணங்களாலேயே இவரை கடவுளின் மகனாகவும் கடவுள் அந்தஸ்திற்கும் கொண்டு சென்று விட்டனர்.ஆனால் இவர் ஒருபோதும் தன்னை கடவுளின் குமாரரென்றும் தன்னை வணங்குமாறும் கூறவேயில்லை.கிருத்தவர்கள் தம் வேதமாக கருதக்கூடிய பைபிளில் கூட ஏசு தன்னை கடவுளின் குமாரர் என்று கூறிவில்லை.ஈசா(ஏசு) என்பவர் மக்களை நேர்வழிப்படுத்த இறைவனால் அனுப்பப்பட்ட தூதரை தவிர வேறில்லை என்பதே இஸ்லாத்தின் நம்பிக்கையாகும்.

<u>முஹம்மது நபி</u>

இந்த வருசையில்தான் இறுதி நபியாக, முஹம்மது என்ற இறைதூதரை தேர்ந்தெடுத்து அவருக்கு சத்திய வேதமான குர்ஆன் எனும் வேதத்தை இறைவன் வழங்கினான்.மற்ற இறைதூதர்கள் என்ன பணியை செய்தார்களோ அதே ஓரிறை கொள்கையை நோக்கி மக்களை அழைக்கத் தொடங்கினார் . திருக்குர்ஆனில் முந்தைய மாற்றப்பட்ட வேதங்களைப்பற்றியும் முந்தைய சமுதாயதினரைப்பற்றியும் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

முஹம்மது நபி (ஸல்) அவர்கள் காலத்தில் அந்த சமுதாயத்தில் இருந்த மக்கள் காட்டுமிராண்டிகள் போல அறிவு இல்லாமல் பெண்மக்களை கொலை செய்து அறியாமையிலும் தெளிவான வழிகேட்டிலும் இருந்தனர். அவர்கள் காபா என்னும் புனித ஆலயத்தில் இறைவனையும் மேலும் முந்தைய நபிமார்களின் சிலைகளையும், சூரிய சந்திரன் போன்ற எண்ணிலடங்கா சிலைகளை வணங்குவதில் மூழ்கிக் கிடந்தனர்.அந்த சிலைகள் தங்களுடைய கடவுளிடம் பரிந்து பேசும் என்ற மூட நம்பிக்கையில் மூழ்கி இருந்தனர்.

**இறுதி தீர்ப்பு நாள்**

இந்த உலகத்தில் யார் ஒரே இறைவனை வணங்கி அவனுக்கு கட்டுப்பட்டு நடப்பார்களோ அவர்களை நிலையான சொர்கத்தை வழங்குவதாகவும் ,அல்லாஹ்வையும் அவனது தூதர்களையும் நிராகரித்து தீய வழியில் நடப்பவர்களை நரகத்தில் நுழைவிப்பதாகவும் குர்ஆனில் இறைவன் கூறுகிறான். இந்த நாளையே இஸ்லாம் "இறுதி தீர்ப்பு நாள்" என்று கூறுகிறது.அப்போது மக்களிடையே தீர்ப்பு வழங்கப்படும். இந்த உலகத்தில் சட்டத்தின் ஓட்டைகளில் தப்பிதவர்களுக்கும்,நல்லவனாக நடித்தவர்களுக்கும் ஏக இறைவனை நம்பாதவர்களுக்கும் நரகம் கிடைக்கும் என்பது இஸ்லாத்தின் முக்கிய நம்பிக்கையாகும்.

இந்த உலக வாழ்வு நிலையற்றது,மரணம் வரும் நேரத்தை யாராலும் கணிக்க இயலாது. அந்த ஏக இறைவனை நம்பாத மக்கள் வாழ்வில் சிறிது ஏமாற்றம் அல்லது தோல்வி ஏற்பட்டால் உடனே துவண்டு போய் தற்கொலை முடிவை எடுத்து விடுகின்றனர். ஆனால் இஸ்லாமிய மக்களிடையே தற்கொலை விகிதம் மிக குறைவாக உள்ளது ஏனென்றால் துன்பங்களை இறைவனின் சோதனை என்றும் எவரையும் அவரது தகுதிக்கு மீறி இறைவன் சோதிப்பதில்லை என்றும் பொறுமையுடன் சகித்துக் கொள்கிறார்கள். இவர்களைப் போன்றோருக்கு இறைவன் சொர்கத்தை வாக்களிக்கின்றான். .

**ஐந்து கடமைகள்**

இஸ்லாத்தில் ஐந்து கட்டாய கடமைகள் உள்ளன அவை (கலிமா) இறைவனை நம்பிக்கை கொள்வது, தொழுகை நேரம் குறிப்பிடப்பட்ட ஐந்து நேரம் இறைவனை பிரார்த்தனை புரிவது, நோன்பு ரமலான் மாதம் பகல் காலங்களில் உண்ணாமலும் பருகாமலும் இருந்து இறையச்சத்தை அடைவது, ஜக்காத் நம்மிடம் இருக்கும் பொருளாதரத்தில் தேவைக்கு போக மீதமிருப்பதில் 100 க்கு இரண்டரை சதவிகிதம் கணக்கு பார்த்து ஏழை எளியவருக்கு உதவி செய்வது, இறுதி கடமையான ஹஜ் எனும் புனித பயணம் யாருக்கு பொருளாதார வசதியும் சென்று வர உடல்நலமும் இருக்கிறதோ அவர் மீது கடமையாக்கப்பட்டுள்ளது.

இவ்வுல வாழ்க்கை ஒரு தேர்வு பயிற்சி கூடம் நன்மை எது? தீமை எது? என்று பிரித்து காண்பித்து விட்டு தான் தூதர்கள் அனைவரும் சென்றிருக்கிறார்கள். அதே வழியில் தான் முஹம்மது நபியும் வழிகாட்டி அதன் படி வாழ்ந்தும் காட்டி சென்று விட்டார்கள் இன்றளவும் குரானும், நபியின் போதனையும் மாறாமல் நம் முன்னே இருந்து கொண்டு இருக்கிறது அதை நம்பாதவர்களுக்கு இவ்வுலக வாழ்க்கை அழகாகவும் கவர்ச்சிகரமாகவும் தோற்றமளிக்கும், அனால் மறுமையில் அவர்களுக்கு பெரும் தண்டனை காத்து இருக்கிறது!

குர்ஆன் மற்றும் நபியின் போதனைபடி வாழ்க்கையை அமைத்து கொள்பவருக்கு இந்த உலகம் சிறைச்சாலை போல் தான் காட்சி தரும் ஆனால் மறு உலகில் அவருக்கு அழகிய பரிசு அவரது இறைவனிடத்தில் காத்து கொண்டு இருக்கிறது. இஸ்லாம் என்றாலே தீவிரவாதம் என்று மேற்கத்திய நாடுகளும் மீடியாக்களும் தவறான கருத்தை போதித்து வருகிறது உதாரணமாக ஒரு முஸ்லிம் சிரிதாக நகம் வெட்டும் கத்தி வைத்திருந்தால் அதை என்னவோ பயங்கர ஆயுதம் போலவும், மற்ற சமுதாயத்தினர் உலகையே அளிக்கும் அணு ஆயுதம் வைத்து இருந்தாலும் அதை அவர்கள் கண்டு கொள்ளாமலும் அவர்களின் தற்காப்புக்கு தான் என்றும் திரித்து மீடியாக்கள் மூலம் பிரச்சாரம் செய்கின்றனர் அனால் இதற்க்கெல்லாம் எதிர் வினையாக

குர்ஆனை ஆய்வு செய்த மேற்கத்திய விஞ்சானிகள் வியப்பின் உச்சிக்கே சென்று விடுகிறார்கள் ஏனெனில் டார்வின், ஹாவ்கின்ஸ் போன்றவர்களின் அனுமானங்கள் எல்லாம் அடிபட்டுபோய்விட்டன. குர்ஆனில் 1400 ஆண்டுகளுக்கு முன்னே படிப்பறிவே இல்லாத முஹம்மது எப்படி அறிவியல், விஞ்ஞானம் போன்றவற்றை இவ்வளவு தெளிவாக இந்த நூற்றாண்டுகளில் அறிவதை கூற முடியும் என்று இது உண்மையிலேயே இறைவனின் வேதம் தான் என்று கூறி, அடுத்த நிமிடமே "வணக்கத்திற்கு உரியவன் அல்லாஹ் ஒருவனே அவனை தவிர வேறு யாரும் இல்லை" என்பதை உளப்பூர்வமாக மொழிந்து இஸ்லாத்தை ஏற்றுகொள்வதை தொடர்ந்து பார்த்தும் கேட்டும் வருகிறோம்.

இன்று உலகில் இறைவன் விசயத்தில் அவனது கட்டளைகளை அலட்சியம் காட்டும் நாம் ஒரு கடையில் சென்று கத்தரிக்காய் வாங்கும் போது மட்டும் அதை உருட்டி, புரட்டி, பார்த்து பார்த்து வாங்கி வருகிறோம். அதையே கடவுள் என்று வந்தால் யார் என்ன சொன்னாலும் பின் பற்ற தயாராகி விடுகிறோம்.நமது தாய், தந்தையர்கள், முன்னோர்கள் எதை செய்தார்களோ, எதை எல்லாம் வணங்கி வந்தார்களோ அதை கண்மூடி தனமாக பின்பற்றுகிறோம். அவர்கள் படிப்பறிவில்லாமல் இருந்தார்கள் என்பதற்காக நாமும் அவ்வாறா இருந்தோம்? இல்லை ஆகவே இதை எல்லாம் படிக்கும் சகோதர, சகோதரிகள் மாற்று மத சகோதர, சகோதரிகளும் நடு நிலையோடுயோடும் , குர்ஆன் என்ற வேதத்தின் அடிப்படையிலும் இஸ்லாத்தை அறிந்துகொள்ளவேண்டும்.இஸ்லாத்தை தவராக சித்தரிக்கும் மீடியாக்களை பார்த்தும்,ஒரு சில இஸ்லாமிய பெயர் தாங்கியவர்கள் செய்யும் தவறுகளை பார்த்தும் இஸ்லாத்தை எடைபோட்டு விட வேண்டாம்! என்பதே இக்கட்டுரையின் நோக்கம் மற்றும் வேண்டுகோள்.

இறைவனின் சாந்தியும் சமாதானமும் என்றன்றும் நம் அனைவர் மீதும் நிலவட்டுமாக.

# FRTJ

**Contact (தொடர்புக்கு) : mail@frtj.net**

**Website : www.frtj.net / www.frtjfr.blogspot.com**